தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 ஏப்ரல் 11, திங்கட்கிழமை

பங்குனி 28, ஸ்ரீமுக -- திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகலாம்

பேரறி வாளன் திரு."

ஒப்புரவினால் உலகம் வாழ விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் அனைவரும் நீருண்ணும் வகையில் அமைந்துள்ள ஊருணி, நீரால் முழுஅளவில் நிறைந்தாற் போன்றதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 241. திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

241—

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடியை தனித் தாலுகாவாக்குதல்.

* 24433—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி பகுதியை தனித் தாலுகாவாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இக்கருத்து ஆய்வில் உள்ளது.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தாலுகா பரப்பளவிலேயும் மக்கள் தொகையிலேயும் பெரிய தாலுகா ஆகும். ஆதி மலைவாழ் மக்கள் வாழக்கூடிய மிகவும் பின்தங்கிய மலைப் பகுதியாகும். ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டது. 10 ஊராட்சிகளும், 96 கிராமங்களும் அடங்கியது. மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள், பழங்குடியினர், ஏழை விவசாயிகள் பெரும்பாலும் கூலி வேலை செய்தால்தான் அன்றாடம் சாப்பாட்டுக்கே வழி என்ற நிலையில் உள்ளவர்கள். மேலும் தாளவாடியிலிருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : அவர்கள் தாலுகா சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளுக்கும் வருகை புரிய வேண்டியிருப்பதால் சத்தியமங்கலத்தை ஒரு தாலுகாவாகவும், தாளவாடியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தாலுகாவாகவும், இரண்டாகப் பிரிக்க, ஏற்கெனவே 1990-ல் ...... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கிற கருத்துக்கள் பூராவும் என்னிடத்திலே இருக்கின்றன. அதை விரைவிலே ஆராய்ந்து நல்ல முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி சரஸ்வதி, கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி கூறி, அடுத்த ஆண்டாவது மலைவாழ் மக்களுக்காக பரிசீலிக்கப்படுமா ? தனித் தாலுகாவாக அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 242, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.